# நம்பிக்கை மறுபடியும் தூண்டப்பட்டது (23:11-35)

*நம்பிக்கையை இழந்து போவதென்பது துன்பகரமானதாகும். தனிநபர்கள் தங்களின் உடல் நலம் தேறும், தாங்கள் நேசிக்கும் ஒருவரின் உடல் நலம் சீரடையும், தங்களின் துணைவர் மறுபடியும் தன்னிடம் வருவார் என்ற நம்பிக்கையை இழந்திருந்த வேளைகளில் நான் அவர்களுடன் இருந்திருக்கின்றேன். அவர்களின் தோள்கள் தளர்ந்து போவதையும், அவர்களின் முகங்கள் தொய்ந்து போவதையும், அவர்களின் விழிகள் நிலைகுத்திப் போவதையும் நான் கண்டிருக்கின்றேன். நம்பிக்கையே நம்மை இயங்கச் செய்வதாயிருக்கும் போது, "நம்பிக்கை வைப்பதற்கு ஒன்றுமில்லை" என்று முடிவு செய்வது அழிவுக்குரியதாகும் (யோபு 6:11;* NCV*).*

*ஒரு காலத்தில், பவுல் ரோமாபுரி செல்வதில் நம்பிக்கையாயிருந்தார் (அப். 19:21; ரோமர் 15:22-29), ஆனால் அந்த நம்பிக்கை நசுக்கப்பட்டிருந்தது, எருசலேமுக்கு அவர் வந்த சில நாட்களிலேயே அவர் தாக்கப்பட்டு, கைது செய்யப்பட்டிருந்தார். இப்பொழுது அவர் சிறையில் இருந்தார், யூதர்கள் அவரைக் கொலை செய்யத் திட்டமிட்டார்கள். இது ஒரு நம்பிக்கையற்ற சூழ்நிலையாகக் காணப்பட்டது: அவர் சிறையில் இருந்தால், அவருக்கு ஊழியம் இல்லை; அவர் விடுவிக்கப்பட்டால் நிச்சயமாகவே அவர் கொலை செய்யப்படுவார். ரோமாபுரியைச் சென்றடையலாம் என்ற அவரது நம்பிக்கை விட்டுவிட்டு எரிந்து பின்பு குறைந்து போயிற்று.*

*இந்தப் பாடமானது பவுலின் நம்பிக்கை மறுபிறப்படைந்ததைப் பற்றியதாகும் - மற்றும் இப்பாடம், உங்களுடைய மற்றும் என்னுடைய மறைந்து தேயும் நம்பிக்கைகள் உயிர்த்தெழுப்பப் படலாம் என்பதைப் பற்றியதும் ஆகும்.*[1]

# தேவனுடைய வாக்குத்தத்தம் (23:11)

*23:10ல் பவுல் சனதெரீன் சங்கத்தாரின் பிடியிலிருந்து மீட்கப்பட்டிருந்தார்: "மிகுந்த கலகம் உண்டானபோது, பவுல் அவர்களால் பீறுண்டு போவனென்று சேனாதிபதி பயந்து, போர்ச் சேவகர் போய், அவனை அவர்கள் நடுவிலிருந்து இழுத்துக் கோட்டைக்குக் கொண்டு போகும்படி கட்டளை யிட்டான்."*

இந்தப் பாடமானது பவுல் தமது சிறையறையில் தனிமை யாய் இருப்பதிலிருந்து தொடங்குகின்றது. அது இருட்டா யிருந்தது, ஆனால் பவுலினால் தூங்க முடியாதிருந்தது. G. கேம்ப்பெல் மார்கன் அவர்கள், அந்த இரவை, "பவுலின் வாழ்க்கையிலேயே ... மிகுந்த இருளாயிருந்த ஒன்று" என்று அழைத்தார். கும்பலானது அவரை அடித்திருந்த காயங்களின் வலியை ஆலோசனைச் சங்க அறைகளில் அவர் பெற்ற அடி யானது இன்னும் அதிகமாய்த் தீவிரப்படுத்தியது, அது அவருக் குப் புதிய வலிகளையும், துன்பங்களையும் கொடுத்திருந்தது. இருப்பினும், அவரது இருதயத்தில் ஏற்பட்டிருந்ததே மாபெ ரும் வேதனையாயிருந்தது.

பவுலின் மனநிலையைப் பற்றி லூக்கா எதுவும் கூறவில்லை, ஆனால் அதைப் பற்றிக் கட்டியெழுப்புவது ஒன்றும் கடின மானதல்ல:[2] அவர் *தைரியமற்றவராய்ப்* போயிருக்க வேண்டும்; கிறிஸ்தவர்களுக்கு மத்தியில் இருந்த உறவுகளை மேம்படுத்த அவர் கொண்டிருந்த வளமான திட்டமானது ஒன்றுமற்றதாகி விட்டதென்பது உறுதி. அவர் நிச்சயமாகவே *நம்பிக்கையிழந்து போயிருந்தார்;* அவர், தமது சகயூதர்கள் தாம் கூறுவதைக் கேட்பார்கள் என்று நம்பியிருந்தார், ஆனால் அவர்கள் அவ்வாறு செய்ய மறுத்துவிட்டார்கள். அவர் *சந்தேகம் நிறைந்தவராயிருக்க* வேண்டியதாயிற்று; அவர் ரோமாபுரி செல்வதற்கு வழியே இல்லை என்பதாகக் காணப்பட்டது. அவரது இருதயத்தின் நம்பிக்கை உலர்ந்து போயிருந்தது.

இருப்பினும், நம்பிக்கையை மறுபடியும் தூண்டுவதில் கர்த்தர் மகாபெரியவராய் இருக்கின்றார். தமஸ்குவுக்குச் செல்லும் சாலையில் பவுலுக்குக் கர்த்தர் தரிசனமான போது, தாம் மறுபடியும் அவ்வப்போது மீண்டும் தோன்றுவதாக

அவருக்கு வாக்குத்தத்தம் செய்திருந்தார் (26:16). இதற்கு முன்பு பவுலின் உற்சாகம் குன்றிப் போய், அவரருகில் அபாயம் இருந்தபோது குறைந்தபட்சம் இருமுறை கர்த்தர் தம்முடைய வாக்குத்தத்தத்தைக் காப்பாற்றியிருந்தார் (22:17-21; 18:9, 10). இப்பொழுது கர்த்தர் மறுபடியும் அவரிடத்தில் வந்தார்: [பவுல் சனதெரீன் சங்கத்தின் முன்பு நின்ற] "அன்று இராத்திரியிலே கர்த்தர் பவுலின் அருகே[3] நின்று: 'பவுலே, திடன் கொள்; நீ என்னைக் குறித்து எருசலேமிலே சாட்சிகொடுத்ததுபோல ரோமாவிலும் சாட்சிகொடுக்கவேண்டும்' என்றார்" (23:11).

பவுலின் வேதனையைக் கர்த்தர் உணர்ந்து (எபி. 4:15) ஒவ்வொரு வலியைப் பற்றியும் அக்கறை எடுத்துக் கொண்டார். சூழ்நிலை எப்படி மாறிற்று என்பதைப் பற்றிப் பவுல் நம்பிக்கை யிழந்து போயிருந்தார், எனவே இயேசு தைரியத்தை அவருக்குக் கொண்டு வந்தார்: அவர், "திடன் கொள்" (KJV) என்று கூறினார். வார்ரென் வயர்ஸ்ப் அவர்கள் பின்வருமாறு கூறினார்:

> இந்த வார்த்தைகளை இயேசு தாம் இந்தப் பூமியில் ஊழியம் செய்தபோது அடிக்கடி பேசியுள்ளார். அவர் இவைகளைத் திமிர்வாதக்காரரிடத்திலும் (மத். 9:2), பெரும்பாடுள்ள ஒரு பெண்ணிடத்திலும் (மத். 9:22) பேசியிருந்தார். புயலின் போது தமது சீஷர்களிடத்திலும் (மத். 14:27) மற்றும் மறுபடியும் அவர்களிடத்தில் மேல் வீட்டிலும் (யோவா. 16:33) கூறியிருந்தார். தேவனுடைய மக்கள் என்ற வகையில் நாம் கடினமான வேளைகளில் எப்பொழுதுமே திடன் கொள்ள முடியும், ஏனென்றால், கர்த்தர் எப்பொழுதும் நம்முடன் இருந்து நாம் அதைக் கடந்து வரும்படி செய்கின்றார்.

பவுல் தமது சக யூதர்கள் தம் கருத்தை ஏற்றுக்கொள்ளும் படி செய்ய முடியாமல் போயிற்று என்று நினைத்ததால் நம்பிக்கையிழந்தார், எனவே இயேசு அவருக்குப் பாராட்டுரை யொன்றைக் கொடுத்தார்: "நீ என்னைக் குறித்து எருசலேமில் சாட்சி கொடுத்தாய்." மனம் மாற்றுவதல்ல ஆனால் பிரசங் கிப்பதே அவரது பணியாக இருந்தது. அது நடந்தேறியிருந்தது, கர்த்தர் அவரது முயற்சிகளை ஒப்புக் கொண்டார். தெளிவாய்த் தெரியும் "வெற்றி" என்பது மட்டுமே நாம்

*கர்த்தரைப் பிரியப் படுத்துகிறோம் என்று சுட்டிக்காட்டு வதாகாது. நமக்குத் தரப்பட்ட கட்டளையை உண்மையாய் நாம் நிறைவேற்றினால், நாம் கர்த்தரைப் பிரியப்படுத்து கிறவர்களாய் இருப்போம்.*

*எதிர் காலத்தைப் பற்றிப் பவுல் சந்தேகம் கொண்டிருந்தார், எனவே இயேசு அவருக்கு முன்பாக நம்பிக்கையின் வார்த்தை களை வைத்தார்: "... நீ ... ரோமாவிலும் சாட்சி கொடுக்க வேண்டும்." பவுல், தாம் நிச்சயமாகவே ரோமாபுரி செல்லு வோம் என்பதை முதன்முறையாக அறிந்தார். எருசலேமில் அவருக்கு "கட்டுகளும் உபத்திரவங்களும்" வைக்கப்பட்டிருந் ததை ஆவியானவர் அவருக்கு அறிவித்திருந்தார் (20:22, 23), ஆனால் அதற்கப்பால் ஆவியானவர் வேறெதுவும் கூறியிருந்த தில்லை. இப்பொழுது, ரோமாபுரிக்குச் செல்ல அவருக்குப் பாதை அடைபட்டதாகக் காணப்பட்ட பொழுது, கர்த்தர் அந்தத் தலைநகர் செல்ல அவருக்கு (பவுலுக்கு) மிகச் சிறந்த நெடுஞ்சாலையொன்றைத் திறந்து விட்டார்!*

*கர்த்தர் பவுலுக்கு ஆறுதலையோ, விடுதலையையோ அல்லது வெற்றியையோ வாக்குத்தத்தம் செய்யவில்லை. பவுல் ரோமாபுரி செல்லுவார் என்று மட்டுமே அவர் வாக்குத்தத்தம் செய்தார் - ஆனால் அது ஒன்று மட்டுமே அந்த அப்போஸ் தலருக்குத் தேவையாயிருந்தது. தரிசனம் மங்கியபோது, பவுலின் உடல் இன்னமும் வலித்தது மற்றும் அவர் இன்னமும் சிறைச் சுவர்களால் சூழப்பட்டிருந்தார். இன்னமும் அவர் தாம் ரோமாபுரிக்கு எவ்விதம் செல்ல முடியும் என்பது பற்றிய கருத்து எதுவும் இல்லாமலேயே இருந்தார், ஆனால் இவைகள் எதுவுமே ஒரு பொருட்டல்ல. இப்பொழுது அவர் கர்த்தரின் வாக்குத்தத்தைப் பெற்றிருந்தார்! நீரு பூத்த நெருப்பாயிருந்த பவுலின் எதிர்பார்ப்பை கர்த்தர் விசிறி விட்டார்; நம்பிக்கை யின் தழல்கள் பவுலின் நெஞ்சிலே மீண்டும் ஒருமுறை கொழுந்து விடத் தொடங்கின!*

*இரவு இருளாயிருக்கும் பொழுது, நம்பிக்கை முற்றிலுமாய் அற்றுப் போகும் பொழுது, கர்த்தர் நமது நம்பிக்கையை மறுபடியும் தூண்டிவிட முடியும். இல்லை, கர்த்தர் நமக்குத் தரிசனமாகி ஒரு வாக்குத்தத்தத்தைத் தருவதோ அல்லது ஒவ்வொரு கனவிலும் உணர்த்துவதோ இல்லை. இருப்பினும், அவர் நமக்கு திடப்படுத்தும், பாராட்டும், நம்பிக்கையூட்டும்*

ஒரு செய்தியைக் கொடுக்கின்றார்: "கர்த்தருக்குக் காத்திரு; அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்; ..." (சங். 27:14) என்பதே அவரது திடப்படுத்தும் செய்தியாகும். "நல்லது, உத்த மமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, ..." (மத். 25:21; KJV) என்பதே அவரது பாராட்டுதலின் செய்தியாகும். ''நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவி கொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம்" (1 யோவா. 5:14) என்பதே அவரது நம்பிக்கையின் செய்தியாகும். நமது வாழ்வின் ஒவ்வொரு விஷயமும் சரியற்றதாய் இல்லாதிருக்கலாம், ஆனால் இது சரியானதாகும்: தேவன் நம்மை நேசித்து பராமரிக்கின்றார், நமது வாழ்க்கையில் நடைபெறும் யாவற்றையும், "அவரது தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறது" (ரோமர் 8:28)!

நமது வரலாறு இன்னமும் முடிவடையவில்லை. கர்த்தரின் வாக்குத்தத்தமானது உடனடியாகக் கடுமையான சோதனைக் குள்ளாயிற்று.

# தேவனுடைய அருளிரக்கம்
# *(23:12-35)*

**சூழ்ச்சியொன்று ஏற்படுத்தப்பட்டது (வ. 12-15)**

கர்த்தர் பவுலினிடத்தில் அவரது எகிர்காலம் பற்றிப் பேசியிருந்தது போலவே, அந்த அப்போஸ்தலரின் எதிரிகள் பவுலுக்கு ஒரு எதிர்காலம் இருப்பதைத் தடுப்பது எப்படி என்று ஆராய்ந்து கொண்டிருந்தார்கள். புறஜாதியாரின் மண்டபத்தி லும், மறுபடி ஆலோசனைச் சங்கத்தின் அறைகளிலும் அவர் தங்களின் விரல்களிலிருந்து தப்பி விட்டதால் ஆத்திரமடைந்த அவர்கள், தாங்கள் மிகச் சிறந்ததென்று எண்ணிய ஒரு திட்டம் தீட்டினார்கள்: ''விடியற்காலமானபோது, யூதரில் சிலர் ஒருமித்து, தாங்கள் பவுலைக் கொலை செய்யுமளவும் புசிப்பது மில்லை குடிப்பதுமில்லையென்று சபதம் பண்ணிக் கொண் டார்கள்.[4] இப்படிக் கட்டுப்பாடு பண்ணிக் கொண்டவர்கள்

*நாற்பது பேருக்கு அதிகமாயிருந்தார்கள்" (வ. 12, 13). அவர்களுடைய சபதமானது பின்வருமாறு இருந்திருக்கலாம்: "நாம் பவுலைக் கொலை செய்யுமுன் உண்டாலோ அல்லது குடித்தாலோ, கர்த்தர் நமக்கு இன்னும் அதிகமாய்ச் செய்யட்டும்." இப்படிப்பட்ட கொலை நோக்கமொன்றின் தொடர்பாகக் கர்த்தருடைய நாமம் தொழப்பட்டது பற்றி நாம் அதிர்ச்சியடைகின்றோமா? இயேசு தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு, "... உங்களைக் கொலை செய்கிறவன்தான் தேவனுக்குத் தொண்டு செய்கிறவனென்று நினைக்குங் காலம் வரும்" (யோவா. 16:2;* NIV*) என்று வாக்குத்தத்தம் செய்திருந்தார்.*

*இந்த சபதத்தில் தங்களை ஈடுபடுத்திக்கொண்ட நாற்பதுக்கு அதிகமான யூதர்கள் யார்? அவர்கள் இருபது ஆண்டுகளுக்கு முன்பாகப் பவுலைக் கொலை செய்ய முயற்சித்திருந்த (கிரேக்க) யூதர்களா (9:29)? அவர்கள் ஒரு சில நாட்களுக்கு முன்பு கலகத்தைத் தொடங்கியிருந்த ஆசியா நாட்டு யூதர்களா (21:27)? அவர்கள் சங்கத்தில் பவுல் ஆவேசப்பட்டிருந்த சதுசேயர்களிலிருந்து வந்தவர்களா? (23:6-9) - அல்லது குறைந்தபட்சம் சதுசேயர்களின்மேல் பட்சமானவர்களா? யூதர்களில் பவுலின் எதிரிகளாய் இருந்தவர்கள் திரளாய் இருந்ததால் ஒருவேளை இவர்கள் யாவரும் மற்றும் இன்னும் அதிகமானவர்களும் இதில் ஈடுபட்டிருந்திருக்கலாம்.*

*அவர்களுடைய சூழ்ச்சிக்கு சனதெரீன் சங்கத்தாரின் ஒத்துழைப்பு தேவைப்பட்டது, ஆனால் பிரதான ஆசாரியர் மற்றும் அவரது நண்பர்களின் இரத்தக் கறை படிந்த மதிப்பை அறிந்த அவர்கள், தங்களின் கொலைத் திட்டம் குறித்து அவர்களை அணுகத் தயங்கவில்லை.*

> *அவர்கள் பிரதான ஆசாரியர்களிடத்திலும் மூப்பர்களிடத்திலும் போய்: நாங்கள் பவுலைக் கொலை செய்யுமளவும் ஒன்றும் புசிப்பதில்லையென்று உறுதியான சபதம் பண்ணிக்கொண்டோம். ஆனபடியினால் நீங்கள் ஆலோசனைச் சங்கத்தாரோடே கூடப் போய், அவனுடைய காரியத்தை அதிக திட்டமாய் விசாரிக்க[5] மனதுள்ளவர்கள்போலச் சேனாபதிக்குக் காண்பித்து, அவர் நாளைக்கு அவனை உங்களிடத்தில் கூட்டிக் கொண்டு வரும்படி அவரிடத்தில் கேட்பீர்களாக. அவன் கிட்ட வருகிறதற்குள்ளே நாங்கள் அவனைக் கொலை*

செய்ய ஆயத்தமாயிருப்போம் என்றார்கள் (வ. 14, 15).[6]

சூழ்ச்சி மிக எளியதாய் இருந்தது. சங்கத்தாரின் பிரதிநிதி யொருவர் ரோம சேனாதிபதியினிடம் சென்று முந்திய நாள் கலகத்திற்காக மன்னிப்புக் கேட்டுக் கொண்டு, அந்தக் கலகம் மறுபடியும் ஏற்படாது என்ற உறுதியுடன் இன்னொரு வாய்ப்பைக் கேட்க வேண்டும். பவுலின் குற்றம் என்ன என்பது பற்றி அந்த அதிகாரி இன்னமும் குழம்பிக் கொண்டிருந்ததால், உண்மையைக் கண்டு பிடிப்பதற்காக அவர் இன்னொரு வாய்ப்பை அநேகமாய் வரவேற்பார். சூழ்ச்சிக்காரர்கள் நாற்பது பேரும் தங்கள் ஆடை மடிப்பிற்குள் கூர்மையான குறுவாள்களை வைத்துக் கொண்டு தேவாலயத்தின் கூட்டத் திற்குள் கலந்திருப்பார்கள். சிறு குழுவான படைவீரர்கள்[7] சூழப் பவுல் புறஜாதியார் மண்டபத்தின் வழியாக விரைவாய் அழைத்து வரப்படுகையில், கொலைகாரர்கள் அவரைச் சூழ்ந்து, கத்திகளைப் பாய்ச்சுவார்கள். ஒரு கணத்தில் பவுலின் இரத்தம் அவரது பாதுகாப்பாளர்கள் மற்றும் கொலைகாரர்கள் ஆகியோரின் இரத்தத்துடன் கலந்து நடைபாதையில் சிந்தும். இந்தச் செயல் திட்டமானது சங்கத்தாருக்கு அறிவிக்கப்பட்டு, பிரதான ஆசாரியர் தமது தலையைக் குலுக்கி, ஆலய மண்டபங் களில் இப்படிப்பட்ட செயல் நடப்பது பற்றிய அவர் பயத்தை அறிவித்து, சபையைக் கலைப்பார். இது நிச்சயமாகவே வெற்றியடையக் கூடிய சூழ்ச்சியாகும்.

ஞானியான மனிதர், “கர்த்தருக்கு விரோதமான ஞானமு மில்லை, புத்தியுமில்லை, ஆலோசனையுமில்லை” (நீதி. 21:30; NIV) என்று அறிவித்திருந்தார் - மற்றும் பவுல் ரோமாபுரியைச் சென்று சேருவார் என்று இயேசு உறுதியளித்திருந்தார். பின்பு, எப்படி இந்தச் சூழ்ச்சியானது விலக்கப்பட முடியும்? பவுல் அற்புதமாய்த் தப்பிக்க கர்த்தர் ஏற்பாடு செய்வாரா? அற்புதமாய்ச் சிறைச்சாலை திறப்பதில் தேவன் தம்மைக் கை தேர்ந்தவராய் நிரூபித்திருந்தார் (அப். 5:19; 12:7; 16:26). அப். 23ல் இது கர்த்தருடைய ஏற்பாடாய் இருக்கவில்லை. மாறாகப் பவுல் தேவனுடைய அருளிரக்கமுள்ள அக்கறையினால் பாதுகாக்கப்படுவார்.

தேவனுடைய அருளிரக்கம் பற்றிய வேதாகம உபதேச

*மானது எவ்வித மாறுபாடுமின்றி நமது நம்பிக்கையை அதிகரிக்கும்.* G. C. *ப்ரூவர்*[8] *அவர்களிடத்தில் ஒருமுறை, "தேவனுடைய சிறப்பான அருளிரக்கத்தை நீங்கள் நம்புகின் றீர்களா?" என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர், "வேறு வகை ஏதாவது இருக்கின்றதா?"*[9] *என்று விடையளித்தார்.* "Providence" *என்ற வார்த்தையானது எனது ஆங்கில வேதாகமத்தில் ஒரே ஒரு இடத்தில் மட்டுமே காணப்படுகின்றது*[10] *- அது அப். 24:2 ஆகும் (தமிழில் அப். 24:3ல் இது ''பராமரிப்பு'' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது). இவ்விடத்தில் அது தேவனு டைய பராமரிப்பையல்ல, ஆனால் ரோம அதிகாரியொருவரின் தொலை நோக்கைக் குறிப்பிட்டது.* "Providence" *என்ற ஆங்கில வார்த்தையானது "முன்னாகப் பார்த்தல்" என்று அர்த்தப்படும் (அதாவது, எதிர் நோக்குதல்) இலத்தீன் வார்த்தையிலிருந்து வருகின்றது,* "Providence" *என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்கக் கூட்டு வார்த்தையும் ஏறக்குறைய இதே அர்த்தமுள்ள தாக இருக்கின்றது: ''முன்னாக அல்லது* [*காலத்தை*] *முன்னதாகவே எதிர்நோக்குதல்.'' ஆங்கிலம் மற்றும் கிரேக்க வார்த்தைகள் இரண்டுமே எதிர்காலத்திற்கென்று பராமரிப்புக் கொடுப்பதைக் குறிப்பிடுகின்றன. மனிதர்கள் இதை எப்பொழுதுமே செய்கின்றார்கள். தேவன் தமது மக்களுக்கு இதைச் செய்கின்றார் என்று அறிவது எவ்வளவு மறுஉறுதிப் பாடுள்ளதாய் இருக்கின்றது!*

*இயற்கை விதிகளை விடுத்து (அதாவது அற்புதங்களின் மூலமாக) இதைச் செய்வதைக் காட்டிலும், தேவன் இயற்கை விதிகளின் மூலமாகவே தமது பராமரிப்பை நிறைவேற்று கின்றார். "வரலாற்றின் பின்புறத்தில் தேவனுடைய கரம்"*[11] *என்று யாரோ ஒருவர் இந்தப் பராமரிப்பைக் கூறியுள்ளார். பவுல் கடைசி முறையாக எருசலேமுக்கு வந்ததைப் பற்றி நாம் ஏற்கனவே படித்ததில், தேவனுடைய பராமரிப்பு மறுபடி மறுபடி பணி செய்ததை நாம் கண்டிருக்கின்றோம். பவுல் தேவாலய மண்டபத்தில் கும்பலினால் சூழப்பட்ட போது உடனடியாக அங்கு ரோம சேனாதிபதி வந்தது தற்செயலா னதா? பவுல் தாம் ரோமக் குடிமகனாய் இருந்ததால் ரோமா னிய "அரை - மரணத்திற்கு" தப்பியது "அதிர்ஷ்டவசமானது" மட்டுமா? பவுலின் குடியுரிமையை மரியாதை செலுத்துமள வுக்கு அந்த சேனாதிபதி மனச்சான்றுள்ள அதிகாரியாய்*

*இருந்தது "தற்செயலாக நடந்ததா"? இல்லை, நமது தேவன் கட்டுப்படுத்துகின்றார்!*

*தேவன் இன்றைய நாட்களில் அற்புத விதமாய்ச் செயல் படுவதில்லையென்று நாம் போதிக்கும் பொழுது, தேவனை மட்டுப்படுத்துவதாகக் குற்றம் சாட்டப்படுகின்றோம். தேவன் அற்புத விதத்தினாலன்றி, செயல்பட முடியாதென்று நம்புகின்றவர்களே தேவனை மட்டுப்படுத்துகின்றார்கள்! வசனம் 12 முதல் 35 முடிய ஓரிடத்தில் கூட தேவன் குறிப்பிடப்படவில்லை, எந்த அற்புதமும் நடைபெறவில்லை; ஆனால் நடந்த எல்லாவற்றிலும் தேவனுடைய கரம் இருந்தது என்பது உறுதியாகும்!*

## *சூழ்ச்சியொன்று வெளிப்படுத்தப்பட்டது (வ. 16-22)*

*வசனம் 16ல் நாம் இவ்வரலாற்றைப் பற்றுகின்றோம்: "இந்தச் சர்ப்பனையைப் பவுலினுடைய சகோதரியின் குமாரன் கேள்விப்பட்டு" (வ. 16அ). லூக்கா நமது ஆர்வத்தை எவ்வித மாய்த் தூண்டுகின்றார்![12] இந்த மைத்துனர் யார்? அவர் ஏன் எருசலேமில் இருந்தார்? அவர் ஒரு கிறிஸ்தவராயிருந்தாரா?[13] அந்த சர்ப்பனையை அவர் எப்படி அறிந்தார்?[14] இவைகளில் எதுவும் லூக்காவுக்கு முக்கியமானதாயிருந்ததில்லை. அந்த இளைஞர் அச்சூழ்ச்சியைப் பற்றி அறிந்து பவுலிடம் அச்செய்தி யுடன் நேரடியாக வந்தார் என்பதே முக்கியமானதாய் இருந்தது. "கோட்டைக்குள்ளே போய், பவுலுக்கு அறிவித் தான்" (வ. 16ஆ). (பவுல் ரோமானியர்களிடம் தாம் ஒரு ரோமக்குடி மகன் என்று அறிவித்த உடனேயே தனிச்சிறப்பான உபசரிப்பும், பார்வையாளர்களைக் காண அனுமதியும் பெற்றார் என்பது உறுதி [24:23; 28:30ஐக் கவனிக்கவும்].)*

*பவுல் தமது மைத்துனரின் அறிக்கையைப் பற்றி இயல் பாகவே கவலைப்பட்டார். நாம் பின்வருமாறு வாசிக்கின்றோம்:*

> *அப்பொழுது பவுல் நூற்றுக்கு அதிபதிகளில் ஒருவனை அழைத்து, இந்த வாலிபனைச் சேனாபதியினிடத்திற்குக் கூட்டிக் கொண்டு போ; அவரிடத்தில் இவன் அறிவிக்க வேண்டிய ஒரு காரியம் உண்டு என்றான். அந்தப்படியே அவன் இவனைச் சேனாதிபதியினிடத்திற்குக் கூட்டிக் கொண்டு போய்: காவலில் வைக்கப்பட்டிருக்கிற பவுல்*

> *என்னை அழைத்து, உமக்கொரு காரியத்தைச் சொல்ல வேண்டுமென்றிருக்கிற இந்த வாலிபனை உம்மிடத்திற்குக் கொண்டு போகும்படி என்னைக் கேட்டுக் கொண்டான் என்றான். அப்பொழுது சேனாதிபதி அவனுடைய கையைப் பிடித்துத் தனியே அழைத்துக் கொண்டு போய்: நீ என்னிடத்தில் அறிவிக்க வேண்டிய காரியம் என்னவென்று கேட்டான் (23:17-19).*

*அந்த இளைஞனிடத்திலிருந்த ஏதோவொன்று, ஒருவேளை அவருடைய முகத்தோற்றமானது அவரிடத்தில் விளைவுண்டாக்கும் ஏதோ ஒரு செய்தியிருந்தது என்று உடனடியாக அந்த ரோம அலுவலரை நம்பச் செய்தது. அவர் மற்றவர்கள் யாரும் கேட்க முடியாதபடிக்கு அந்த இளைஞனை ஒரு புறமாக வழி நடத்திச் சென்றார். பவுலின் மைத்துனரைப் பற்றி விளக்குவதற்குப் பயன்படுத்தப்பட்ட சொற்றொடர்களும், சேனாதிபதி அவனுடைய கையைப் பிடித்து தனியே அழைத்துச் சென்ற உண்மையும், அவன் ஒரு சிறு பையன்தான் என்று கல்வியாளர்கள் பலர் முடிவு செய்யக் காரணமாய் இருந்துள்ளன. அப்படியென்றால், இப்படிப்பட்ட அபாயமான செய்தியை சிறைச்சாலைக்குக் கொண்டு வருமளவு அவன் தைரியமுள்ளவனாய் இருந்திருக்க வேண்டும்.*

*அந்த இளம் பையன் ஒரு ரோம அதிகாரிக்கு அறிவுறுத்தல் தந்ததைக் கற்பனை செய்து பாருங்கள்:*

> *அதற்கு அவன்: யூதர்கள் பவுலின் காரியத்தை அதிக திட்டமாய் விசாரிக்க மனதுள்ளவர்கள்போல, நீர் நாளைக்கு அவனை ஆலோசனைச் சங்கத்தாரிடத்தில் கொண்டுவரும்படி உம்மை வேண்டிக்கொள்ள உடன்பட்டிருக்கிறார்கள். நீர் அவர்களுக்குச் சம்மதிக்க வேண்டாம்; அவர்களில் நாற்பது பேருக்கு அதிகமானவர்கள் அவனைக் கொலை செய்யுமளவும் தாங்கள் புசிப்பதுமில்லை குடிப்பதுமில்லையென்று சபதம் பண்ணிக் கொண்டு, அவனுக்குப் பதிவிருந்து, உம்முடைய உத்தரவுக்காக இப்பொழுது காத்துக் கொண்டு ஆயத்தமாயிருக்கிறார்கள் என்றான் (வ. 20, 21).*

*மறுபடியும் பவுலின் மைத்துனரைப் பற்றிய ஏதோவொன்று ரோம அதிகாரி அவனை நம்பும்படி செய்தது. யூதர்கள் இவ்வித சூழ்ச்சிகளில் ஈடுபடும் தன்மையுள்ளவர்கள் என்பதை அறியுமளவுக்குப் போதுமான நீண்ட காலம் சேனாதிபதி பதவி யில் அவர் இருந்திருக்கலாம். அந்தப் பையன் பேசும் போதே கூட, சேனாதிபதி தம் விருப்பத் தேர்வுகளை ஆராய்ந்து கொண்டிருந்தார்: ஆலோசனைச் சங்கத்தாரின் வேண்டு கோளுக்கு ஒப்புக் கொள்வதென்பது ஒரு விருப்பத் தேர்வாய் இருந்தது. அதை அவர் செய்தால், அவர் தலையாய பிரச்சனை ஒன்றிலிருந்து விடுபடலாம் - ஆனால் அது அவரது பணிக்காலத் தில் ஒரு கைதியைத் தப்ப விட்டார் என்ற கறையை அவரது பணிப் பதிவேடுகளில் ஏற்படுத்தி விடும்,[15] மற்றும் அவர் மனச்சான்றுக்குக் கட்டுப்பட்ட ஒரு மனிதராய் இருந்தார். பவுல் பாதுகாக்கப்பட வேண்டிய ரோமக்குடிமகனாயிருந்தார். சனதெரீன் சங்கத்தாரின் திட்டத்திற்கு ஒப்புக் கொள்வது போல் நடித்து, கொலை செய்யப் போகிறவர்களைக் கொலை செய்யப் போதுமான சேவகர்களை அனுப்புவதென்பது இன்னொரு விருப்பத் தேர்வாய் இருந்தது. இருப்பினும், அது ஒரு கலகத்தை - அவர் தவிர்க்க வேண்டிய கலவரச் சூழ்நிலையை - கொண்டு வரக் கூடும். எவ்வளவு முடியுமோ அவ்வளவு விரைவாகவும் அமைதியாகவும் கைதியை நகரத்தை விட்டு வெளிக் கொண்டு செல்லுவதுதான் ஒப்பேரக்கூடிய ஒரே திட்டமாய் இருந்தது.*

*மனதைத் தயாரித்துக் கொண்ட சேனாதிபதி, தகவல் கொடுத்தவனை "நீ இவைகளை எனக்கு அறிவித்ததாக ஒருவருக்குஞ் சொல்லாதே என்று கட்டளையிட்டு" (வ. 22) விரைவாக அனுப்பி வைத்தார். அவர் சங்கத்தாரின் சூழ்ச்சி யைத் தாம் அறிந்து கொண்டதை தாம் செயல்படுத்துவதற்கு முன் சங்கத்தார் அறிவதையோ அல்லது தமது திட்டத்திற்கு அவர்கள் தடை உண்டாக்குவதையோ விரும்பாதிருந்தார். அவர்களுடைய திட்டத்தை அவர் முன்பே அறிந்திருந்தார் என்று அவர்கள் பிற்பாடு அறிந்து கொள்வதையோ அல்லது அவர்கள் கலகம் செய்வதையோ கூட அவர் விரும்பாதிருந்தார். அவரது செயல்பாடுகள் இராணுவம் மற்றும் அரசியல் கொள்கையின் தரமான செயல்பாடுகள் போலக் காணப்பட வேண்டியதாயிருந்தது.*

***சூழ்ச்சியொன்று தோல்வியடைந்தது (வ. 23-35)***

*அந்த அதிகாரி தமது திட்டத்தை விரைவாகச் செயல் படுத்தினார்:*

> *பின்பு அவன் நூற்றுக்கு அதிபதிகளில் இரண்டு பேரை அழைத்து, செசரியா பட்டணத்திற்குப் போகும்படி இருநூறு காவலாட்களையும், எழுபது குதிரை வீரரையும், இருநூறு ஈட்டிக்காரரையும், இராத்திரி மூன்றாம் மணி வேளையில் ஆயத்தம் பண்ணுங்களென்றும்; பவுலை ஏற்றி, தேசாதிபதியாகிய பேலிக்ஸினிடத்திற்குப் பத்திர மாய்க் கொண்டு போகும்படிக்குக் குதிரைகளை ஆயத்தப் படுத்துங்களென்றும் சொன்னதுமன்றி (வ. 23, 24).*

*ஒரு கைதிக்குக் காவல் செல்லச் சேனாதிபதி 470 மனிதர்களை தமது கட்டளையின் கீழ் இருந்த சேனையில் - ஏறக்குறைய பாதியளவை - அனுப்பினார்![16] "பவுலை அகற்றிப் போடு வதற்கு யூதர்கள் எவ்வளவு தூரம் முயற்சி செய்வார்கள்" என்பதை நாம் கண்டிருக்கின்றோம்; இப்பொழுது "ரோம அரசானது பாரபட்சமற்ற நியாயத்தை நிலைநாட்டுவதற்கு எவ்வளவு தூரம் செல்லக்கூடும்!"[17] என்பதை நாம் காணு கின்றோம். ரோமப் பணிப்படைகளின் தலைமையகமாகவும், ரோம ஆளுநரிடம் தங்குமிடமாகவும் இருந்த செசரியா[18] நகருக்குப் பவுல் கூட்டிச் செல்லப்பட வேண்டியதாயிருந்தது.*

*சில கேள்விகளைக் கேட்பதற்கு நான் சற்று நிதானிக்க வேண்டும்: எருசலேமில் இருந்த மக்கள் எல்லாரிலும், சூழ்ச்சி யைக் கேள்விப்பட்டிருந்த ஒருவர் பவுலை எச்சரிக்கை செய்ய அக்கறையாயிருந்தார் என்பது எதிர்பாராத ஒரு நிகழ்ச்சியா? பவுல் பார்வையாளர்களைப் பார்க்கவும், சேனாதிபதிக்கு வார்த்தை சொல்லவும் அனுமதிக்கப்பட்டு, வித்தியாசமாய் நடத்தப்பட்டதென்பது தானாக நேரிட்டதா? சிறு பையனொ ருவனின் பேச்சைக் கவனிக்கவும், என்ன விலை கொடுத்தும் பவுலைப் பாதுகாக்கப் போதுமான அளவு மனச்சான்றுட னிருக்கவும் கோட்டையில் இருந்த சேனாதிபதி நல்வகை மனிதராய் இருந்தது தற்செயலான நிகழ்ச்சியா? ரோமாபுரிக்கு மனுச் செய்து கொள்ளும் வாய்ப்பையும் (25:11) இவ்விதமாய் ரோமாபுரிக்குச் செல்லும் வாய்ப்பையும் பெறும் இடமான செசரியாவுக்கு பவுல் அனுப்பப்பட்டது வெறும் தற்செயல்*

நிகழ்ச்சியா? இந்தக் கேள்விகளைக் கேட்டது இவைகளுக்குப் பதில் அளிப்பதற்காகவே ஆகும்: இல்லை; இவையாவும் தேவனுடைய உன்னதமான பராமரிப்பின் விளைவாகும்!

கைதியைக் கொண்டு செல்லுவதற்கு ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில், சேனாதிபதி ஆளுநருக்கு ஒரு கடிதத்தை எழுதிக் கொண்டிருந்தார். பவுல் செய்த தவறு என்ன என்பது பற்றி தெளிவான கருத்தெதுவும் இல்லாதிருந்ததால், அக்கடிதத்தை எழுதுவது சுலபமாயிருக்க வில்லை.

> ஒரு நிருபத்தையும் எழுதினான்; அதின் விவரமானது:[19]
> கனம் பொருந்திய தேசாதிபதியாகிய பேலிக்ஸ் என்பவருக்குக் கிலவுதியு லீசியா வாழ்த்துதல் சொல்லி அறிவிக்கிறது என்னவென்றால்: இந்த மனுஷனை யூதர் பிடித்துக் கொலை செய்யப் போகிற சமயத்தில், நான் போர்ச்சேவகரோடே கூடப்போய், இவன் ரோம னென்று அறிந்து, இவனை விடுவித்தேன். அவர்கள் இவன்மேல் சாட்டின குற்றத்தை நான் அறிய வேண்டு மென்று இவனை அவர்கள் ஆலோசனைச் சங்கத்துக்கு முன் கொண்டுபோனேன். இவன் அவர்களுடைய வேதத்திற்கடுத்த விஷயங்களைக் குறித்துக் குற்றஞ் சாட்டப்பட்டவனென்று விளங்கினதேயல்லாமல், மரணத்துக்காவது, விலங்குக்காவது ஏற்ற குற்றம் யாதொன்றும் இவனிடத்தில் இல்லையென்று கண்டறிந் தேன். யூதர்கள் இவனுக்கு விரோதமாய்ச் சர்ப்பனை யான யோசனை செய்கிறார்களென்று எனக்குத் தெரிய வந்தபோது, உடனே இவனை உம்மிடத்திற்கு அனுப்பி னேன்; குற்றஞ் சாட்டுகிறவர்களும் இவனுக்கு விரோதமாய்ச் சொல்லுகிற காரியங்களை உமக்கு முன்பாக வந்து சொல்லும்படி அவர்களுக்குக் கட்டளை யிட்டேன். சுகமாயிருப்பீராக, என்றெழுதினான் (வ. 25-30).

இந்தக் கடிதமானது உண்மையொன்றை அறிந்துள்ள விபரங்களின் வெளிச்சத்தில் எவ்வகையில் பெருக்கிக் கூற முடியும் என்பதற்கு வசீகரமான ஒரு எடுத்துக்காட்டாய் இருக்கின்றது. சேனாதிபதி பவுலை மீட்டிருந்தார் என்பது உண்மையே, ஆனாலும் பவுல் ஒரு ரோமக் குடிமகன் என்ப

தால் அவரை மீட்டிருக்கவில்லை. மாறாக கலகத்தை கலைக்கும் படியாகவே பவுலை அவர் கைது செய்திருந்தார். பவுலை அடிக்கத் தொடங்கும் வரையிலும் அவர் ரோமக் குடிமகன் என்பதைச் சேனாதிபதி அறியவில்லை - அந்தக் கடிதத்தின் எடுத்துரைப்பில் அந்த உண்மை மிக வசதியாக விட்டு விடப்பட்டிருந்தது. மற்றும், இந்தக் கடிதத்தை அனுப்பும் போது அந்த சேனாதிபதி அநேகமாக, பவுலின் மீது குற்றம் சாட்டியவர்கள் செசரியாவுக்குச் சென்று குற்றம் சாட்டும்படி அறிவுறுத்தியிருந்திருக்க மாட்டார். அவர்களது பிடிக்கு அப்பால் பவுல் சென்று விட்டதை நிச்சயப்படுத்திக் கொள்வதை அறியுமட்டும், நிச்சயமாக அடுத்த நாள் வரையில் அவர் காத்திருந்திருப்பார்.[20]

இருப்பினும் லூக்கா - புதிய ஏற்பாட்டில் நாம் காணும் உலகப் பிரகாரமான ஒரே ஒரு கடிதமான - இதை அந்த ரோம அதிகாரியைச் சங்கடப்படுத்துவதற்காக அல்ல, மாறாக பின்வரும் வார்த்தைகளை அமரத்துவம் பெறச் செய்யவே உட்படுத்தினார்: "இவன் அவர்களுடைய வேதத்திற்கடுத்த விஷயங்களைக் குறித்துக் குற்றஞ் சாட்டப்பட்டவனென்று விளங்கினதேயல்லாமல், மரணத்துக்காவது விலங்குக்காவது ஏற்ற குற்றம் யாதொன்றும் இவனிடத்தில் இல்லையென்று கண்டறிந்தேன்.''[21] பவுல் என்ன செய்திருந்தார் என்பதில் குழப்பமடைந்திருந்த சேனாதிபதி, கருத்து வேறுபாடு என்பது இறையியல் ரீதியிலானதுதானேயன்றி, அரசியல் ரீதியிலான தல்ல என்று கண்டிருக்க முடிந்தது. ரோமச் சட்டத்தைப் பொறுத்தமட்டில் பவுல் மரணம் அல்லது கைதுக்குப் பாத்திரரல்ல என்று அவர் நம்பினார்.[22] வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், பவுல் குற்றவாளியல்ல, அவர் விடுதலை செய்யப்பட வேண்டும்!

எல்லாம் தயாரான பொழுது, அந்தச் சிறு இராணுவம் எருசலேமின் வடமேற்குப் பகுதியில் நிழலான, மலைப் பகுதியில் அணி வகுத்துச் சென்றது. பவுல் 470 காவல்காரர் களைப் பெற்றிருந்தார். இல்லை, கர்த்தர் அவருடன் இருந்த தால் அந்த எண்ணிக்கை 471 ஆனது. கலகம் அதிகம் ஏற்படும் அப்பகுதியிலிருந்து கூடிய மட்டும் விரைவாக அம்மனிதர்கள் பயணித்தார்கள். "போர்ச் சேவகர் தங்களுக்குக் கட்டளை யிட்டபடியே, பவுலைக் கூட்டிக் கொண்டு, இராத்திரியிலே

*அந்திப்பத்திரி ஊருக்குப் போய்"[23] (வ. 31). அந்திப்பத்திரி என்ற ஊரானது யூதேயா மற்றும் சமாரியாவின் மத்தியிலுள்ள எல்லையில் எருசலேமில் இருந்து சுமார் முப்பத்தைந்து மைல்கள் தூரத்தில் செசரியாவுக்குப் பாதி தூரத்தில் இருந்த ஒரு இராணுவத் தளமாகும்.*

*சேனாதிபதி நம்பியிருந்தபடி, அவர்கள் இரவில், பவுலின் விரோதிகளிடமிருந்து நழுவிச் சென்றார்கள், கரடுமுரடான மலைப் பகுதியான அந்திப்பத்திரியை அவர்கள் அடைந்த மாத்திரத்தில், சர்ப்பனையான திட்டத்திற்கு அப்பால் இருந் தார்கள்; அவர்களுக்கு முன் இருந்த நிலமானது திறந்த சமவெளியாயிருந்தது. ஆகையால் (அநேகமாக ஒரு சுருக்கமான ஓய்வுக்குப் பிறகு) அடுத்த நாளில், அந்த நானூறு போர்ச் சேவகர்களும் ஈட்டிக்காரர்களும் குதிரை வீரர்கள் பவுலை செசரியாவுக்குக் கொண்டு போகும்படி விட்டுவிட்டு (வ. 32) தங்கள் அமைதிக் கடமையை மீண்டும் தொடரும்படி எருசலேமுக்குத் திரும்பினார்கள்.*

*குழுவினர் அனைவரும் குதிரையில் சென்றதால், செசரியா செல்லும் கடைசி இருபத்தைந்து மைல் பயணமானது விரை வில் முடிக்கப்பட்டிருந்திருக்கும். பயணம் செய்கையில் பவுல், இரு வாரங்களுக்கு முன்பு தாமும் தம்முடைய குழுவினரும் பயணம் சென்ற அதே சாலையில் சென்றார். அந்தச் சில நாட் களில் நடந்தவைகளையும், சூழ்நிலை மாறிப் போனதையும் நினைத்துப் பவுல் ஆச்சரியப்பட்டிருக்க வேண்டும்.*

*கடைசியாக, அக்குழு செசரியாவை அடைந்தது. எழுபதுக் கும் கூடுதலான குதிரைப் படையணிகள் நகருக்குள் வந்ததால் குழுவொன்று ஈர்க்கப்பட்டிருக்கும். எழுபது வீரர்கள் சூழப்பட்டுப் பவுல் வந்து கொண்டிருந்ததைக் கிறிஸ்தவர் எவரேனும் கண்டிருந்தால், அகபுவின் தீர்க்கதரிசனம் எவ்வளவு விரைவில் நிறைவேறியது என்று அவர்கள் திகைப்படைந் திருப்பார்கள் (21:10, 11).*

*பவுலின் ஆயுதமேந்திய பாதுகாவலர்கள் ஆளுநரின் அரண்மனையை அடைந்ததும், "நிருபத்தைத் தேசாதிபதியி னிடத்தில் கொடுத்து, பவுலையும் அவன் முன்பாக நிறுத்தினார் கள்" (23:33). "பயணத்தால் அழுக்கான உடைகளுடனும், கை மற்றும் கால்களில் விலங்கிடப்பட்ட நிலையிலும் பேலிக்ஸின் முன்பாகப் பவுல் அமைதியான தைரியத்துடன் (நின்று)*

*இருந்ததை நாம் கற்பனை செய்ய முடிகின்றது."*[24] முதன்முறையாக, ஆனால் அதுவே கடைசி முறையாக அல்ல, சிறிய யூதர், பலஸ்தீனத்தின் அதிக வல்லமை பொருந்திய அரசியல் நபர் ஒருவரை முகமுகமாய்க் கண்டார்.

சேனாதிபதியினிடமிருந்து வந்த கடிதத்தைப் படித்தபின், தேசாதிபதி களைப்பான அந்தப் பயணியை மேலும் கீழும் பார்த்து, அபாயமற்றவராய்க் காணப்படும் அந்த யூதர் எவ்விதம் இவ்வளவு அதிகமான கலவரத்திற்குக் காரணமாயிருந்திருக்க முடியும் என்று ஆச்சரியப்பட்டிருக்க வேண்டும். கடைசியில், அவர் பவுலை எந்த நாட்டவர் என்று கேட்டார் (வ. 34அ). அவர் சிலிசியாவைச் சேர்ந்தவரென்று அறிந்த போது (வ.34ஆ) அது ஒரு ரோம மாகாணமாயிருந்தபடியால் அந்த விஷயத்தைத் தாம் சட்டரீதியாகக் கையாள முடியும் என்று தீர்மானித்தார். அவர் பவுலை ஒரு அரை வாக்குறுதியுடன் அனுப்பி வைத்தார்: "உன் மேல் குற்றஞ் சாட்டுகிறவர்களும் வந்திருக்கும்போது உன் காரியத்தைத் திட்டமாய்க் கேட்பேன் என்று சொல்லி"[25] (வ. 35அ).

பவுல் பொதுவான சிறைச்சாலையில் வைக்கப்படவில்லை, ஆனால் ''ஏரோதின் அரமனையிலே''[26] (வ. 35ஆ) காவல் பண்ணப்பட்டார். இது பெரிய ஏரோதினால் கட்டப்பட்டு, அவரது பெயரைத் தாங்கி நின்ற அரண்மனையாகும். இப்பொழுது அது ரோம தேசாதிபதியின் அலுவலகத் தலைமையகமாகச் செயல்பட்டது. தேவனுடைய அருளிரக்கத்தினால், இது அடுத்து வந்த இரு ஆண்டுகளுக்குப் பவுலின் "பாதுகாப்பு இல்லமாக" இருந்தது (24:27).

பவுலைக் கொலை செய்யுமளவும் உண்ணுவதும் குடிப்பதும் இல்லை என்று சபதம் மேற்கொண்ட நாற்பதுக்கும் மேற்பட்ட கொலைகாரர்களின் நிலைமை என்னவாயிற்று? தங்கள் திட்டம் வீணாயிற்று என்றும் மறுபடியும் பவுல் தங்களின் பிடிகளுக்கு அப்பால் சென்று விட்டார் என்றும் அறிந்த அவர்கள் எவ்வளவாய் வெறுப்படைந்திருப்பார்கள் என்பதை உங்களால் கற்பனை செய்ய முடிகின்றதா? அவர்கள் தங்களின் சபதத்தைப் பற்றிய உணர்வுள்ளவர்களாய் இருந்தால், மிகுந்த பசியடைந்திருப்பார்கள்! யூதர்கள் தாங்கள் சபதம் மேற்கொண்டவைகளுக்கு வருத்தம் தெரிவித்து எதிர்ப் பேச்சுப்பேசுவதில் கை தேர்ந்தவர்களாதலால், இந்த

*மனிதர்கள் பல நேர உணவுகளைத் தவற விட்டார்களா என்பதில் நான் சந்தேகப்படுகின்றேன். குறைந்தபட்சம், அவர்கள், ''கர்த்தருக்கு விரோதமான ... ஆலோசனை யுமில்லை" (நீதி. 21:30;* NIV*) என்பதைக் கற்றிருப்பார்கள் என்று நாம் நம்புகின்றேன் - அதையும் கூட நான் சந்தேகப் படுகின்றேன்.*

# முடிவுரை

*தேவன் கட்டுப்படுத்துகின்றார் என்பதே இந்த வரலாற்றின் திறவுகோல் சிந்தனையாகும். பவுல் தமது நம்பிக்கையை உயிருள்ளதாய்க் காத்துக் கொள்ள வேண்டியது பற்றி அறிய வேண்டியிருந்தது - நமக்கும் கூட அது தேவைப்படுகின்றது! அகுஸ்தீன், "கடந்த காலத்தில் தேவனுடைய கிருபையையும், நிகழ் காலத்தில் அவரது அன்பையும், எதிர் காலத்தில் அவரது பராமரிப்பையும் நம்புங்கள்"[27] என்று கூறினார். ஒவ்வொரு நாளிலும், தேவன் நம் வாழ்வில் செயல்படுகின்றார் என்பதை நாம் கூற முடியாது போகலாம், ஆனால் அவர் அவ்விதம் செயல்படுகின்றார் என்பதில் நாம் நிச்சயமாயிருக்க முடியும். எட் வார்ட்டன் அவர்கள், "நமது வாழ்வில் தேவனுடைய பராமரிப்பென்பது புத்தகம் போன்றதாகும், அதுவும் வலது பக்கமிருந்து இடது பக்கம் வாசிக்குமாறு எழுதப்பட்ட சில மொழிகளைப் போலதாகும், அதுவும் வேதாகமத்தை விசுவாசிப்பவர்களால் மட்டுமே முடியும்"[28] என்றார். என்ன நடந்தாலும் அவரை நம்புங்கள். சங்கீதக்காரருடன் சேர்ந்து, "கர்த்தராகிய ஆண்டவரே, நீரே என் நோக்கமும், ... என் நம்பிக்கையுமாயிருக்கிறீர்'' (சங். 71:5) என்று கூறக் கற்றுக் கொள்ளுங்கள்.*

*இதை நான் முடிக்கையில், இன்னமும் கிறிஸ்தவர்களாகாத வர்களுக்குச் சிறப்புப் பயன்பாடு ஒன்றை நான் இதன் மூலம் தர விரும்புகின்றேன். இந்த பாடத்தில் அற்புதம் என்று ஒன்றுமில்லை, ஆனால் தேவனுடைய அருளிரக்கமே இதை உங்களுக்குக் கொண்டு வந்தது என்பதைக் கவனியுங்கள். இந்த வார்த்தைகளை நீங்கள் ஆராய்ந்து பார்ப்பதென்பது வெறும் தற்செயலானதா? நிச்சயமாக இல்லை! நீங்கள் தேவனுடைய பிள்ளையாக வேண்டுமென்று தேவன் விரும்புகின்றார்! ஏன்*

*நீங்கள் உடனே அப்படியாகக் கூடாது?*

---

குறிப்புகள்

[1]*நடபடிகளின் கடைசி அதிகாரங்களில் "நம்பிக்கை" என்பதே திறவுகோல் வார்த்தையாக உள்ளது (23:6; 24:15; 26:6, 7; 28:20).* [2]*பவுலின் திட்டங்கள் மற்றும் அவரிடம் கூறப்பட்ட இயேசுவின் வார்த்தைகள் ஆகியவற்றை ஒப்பிட்டு நாம் பவுலின் சிந்தனைகளை மறுபடியும் கட்டியெழுப்பிக் காண முடியும். பவுலுக்குத் தேவையானபொழுது ஆறுதல் படுத்துவதற்கென்றே இயேசுவின் வார்த்தைகள் வடிவமைக்கப்பட்டிருந்தன.* [3]*"பவுலின் அருகே நின்று" என்ற சொற்றொடரானது நேரடியாகவும், உருவகமாகவும் எடுக்கப்படலாம் - இது பவுலைக் கர்த்தர் கைவிடவில்லையென்று சுட்டிக் காட்டுகின்றது. 2 தீமோ. 4:16, 17ல் பவுல், "நான் முதல் விசை உத்தரவு சொல்ல நிற்கையில், ஒருவனும் என்னோடே கூட இருக்க வில்லை, எல்லாரும் என்னைக் கைவிட்டார்கள்; ... கர்த்தரோ எனக்குத் துணையாக நின்று ... என்னைப் பலப்படுத்தினார்; ..." என்று கூறினார்.* [4]*இந்த நிகழ்ச்சியை 1 சாமு. 14:24 மற்றும் 2 சாமு. 3:35 ஆகியவற்றுடன் ஒப்பிட்டுக் காணவும். இதற்கிணையான மத நம்பிக்கையற்றவனின் நிகழ்வொன்றை 1 இரா. 19:2ல் காணவும்.* [5]*முந்தின நாளில் பவுலுக்காக வாதாடிய பரிசேயர்கள் இந்தச் சூழ்ச்சியில் அங்கம் வகித்தார்கள் என்று யூகிக்கத் தேவையில்லை (வேதபாரகர்களைப் பற்றி ஒரு பொழுதும் குறிப்பிடப்படவில்லை என்பதைக் கவனிக்கவும்; வேதபாரகர்களில் பெரும்பான்மையானோர் பரிசேயர்களாகவே இருந்தார்கள்). சனதெரீன் சங்க மானது சதுசேயர்களின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது. சனதெரீன் சங்கத்தை மறுபடியும் கூட்டி, அவர்கள் முன்பாகப் பவுலை மறுபடியும் கொண்டு வரும்படி சேனாதிபதியைக் கேட்டுக் கொள்ளுவதும், கொலை திட்டத்தை வெளியிடாமல் இருப்பதுமே அவர்களின் திட்டமாய் இருந்திருக்கும். இதற்குப் பரிசேயர்கள் சம்மதித்திருக்கலாம்.* [6]*இவ்விதமாக, இச்சூழ்ச்சியை ஏற்படுத்தியவர்களும், இதற்கு உடன்பட்ட சங்கத்தாரும் பவுலின் குற்றமற்ற தன்மையை ஒப்புக் கொண்டார்கள் என்பதைக் கவனிக்கவும். வேறுவார்த்தைகளில் சொல்லுவதென்றால், நல்ல விசாரணையொன்றில் பவுல் மீது குற்றத் தீர்ப்பு அளிக்க முடியாதென்று அவர்கள் அறிந்தார்கள்.* [7]*முந்திய நாளின் போது சங்கத்தின் அறைகளுக்குள் சேனாதிபதி அதிகமான எண்ணிக்கையில் போர் வீரர்களைக் கூட்டி வரவில்லை, ஏனென்றால் பவுலை மீட்பதற்கு போர்ச் சேவகர்களை அவர் கூட்டிச் செல்ல வேண்டியிருந்தது (23:27) என்பது உறுதி.* [8]*G. C. ப்ரூவர் அவர்கள் கடந்த தலைமுறையில் நன்கு அறியப்பட்ட ஒரு சுவிசேஷப் பிரசங்கியாராவார்.* [9]*ரிக் ஆட்ச்லியால் பிரசங்கிக்கப் பட்ட "அருளிரக்கத்தின் ஆதாரங்கள்" என்ற பிரசங்கத்தில் மேற்கோள் காட்டப் பட்டது.* [10]*NASB மற்றும் KJVயைப் பொருத்தமட்டில் இது உண்மையாகும். இருப் பினும் இவ்வார்த்தையின் வினைவடிவமானது "தேவன் பராமரிக்கிறார்" என்பது (எ.கா. ஆதி. 22:8) வேதவசனங்களில் வலியுறுத்தப்படுகின்றது.*

[11]*ஆட்சிலியின் கட்டுரையில் குறிப்பிடப்பட்டது.* [12]*இதை F. F. புரூஸ் அவர்கள், "அப்போஸ்தர்களின் நடபடிகளில் இது மிகவும் ஏங்க வைக்கும் நிகழ்ச்சிகளில் ஒன்றாகும், ஏனென்றால் பவுலின் தனிப்பட்ட வாழ்வு, மற்றும் குடும்ப உறவுகள்*

பற்றி அறிய விரும்புபவர்களின் ஆர்வத்தை இது தூண்டுகின்றது'' என்று குறிப்பிட்டார். [13]பவுல் கிறிஸ்தவரான பொழுது, அது அவரது குடும்பத்திலிருந்து அவரைப் புறம்பே நீக்கி வைத்திருக்கலாம் (பிலி. 3:7, 8ஐக் கவனிக்கவும்), ஆனால் ஏதோ ஒரு காரணத்திற்காக இந்த மைத்துனர், பவுலுக்கு என்ன நடந்தது என்பதில் அக்கறையாய் இருந்தார். பவுல் தம் மனமாற்றத்திற்குப் பின்பு (அப். 9:30) தர்சு நகருக்குத் திரும்பி வந்த பொழுது, தமது குடும்பத்தாரில் தம் சகோதரி உட்படச் சிலரை மனமாற்ற முடிந்திருந்ததா? இந்த மைத்துனர் படிப்பதற்காக எருசலேம் வந்திருந்தால், அங்கு சபையின் உறுப்பினர்களைத் தொடர்பு கொண்டு மனம் மாற்றப்பட்டாரா? அல்லது குறைந்தது கிறிஸ்தவர்களுக்காக பரிதாபப்பட்டாரா? அவர் மனமாற்றப்படாதிருந்தால், அவர் பவுலின் "குடும்பத்தார்" மீது கொண்ட அக்கறையின் காரணமாகப் பவுல் கொலை செய்யப்படுவதைக் காண விரும்பா திருக்கலாம். [14]ஒருவேளை அவர் ஒரு வதந்தியை மட்டும் கேள்விப் பட்டிருக்கலாம்; நாற்பதுக்கு மேற்பட்ட மனிதர்கள் அறிந்த ஒரு விஷயத்தை இரகசியமாய்க் காப்பது கடினமானதாகும். இருப்பினும், (1) உடனடியாக அவர் அதைக் கேள்விப் பட்டதாலும் (2) அந்தச் சூழ்ச்சியைப் பற்றி வார்த்தைக்கு வார்த்தை மறுபடியும் கூற முடிந்ததாலும் (வசனங்கள் 12-15ஐ வசனங்கள் 20 மற்றும் 21வுடன் ஒப்பிட்டுக் காணவும்), அந்தத் திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டபோது அவர் மறைவாயிருந்து கேட்டுக் கொண்டிருந்திருக்கலாம் என்பதே அதிகம் ஏற்புடையதாக உள்ளது. ''கேள்விப்பட்டு'' என்பதற்கு மாற்று வாசிப்பாக ASVயில், ''அல்லது, உள்ளே [அவர்கள் இடத்தில்] வந்து" என்றுள்ளது. பவுலின் சகோதரி பிரதான ஆசாரியர் குடும்பத்தில் மணம் முடித்துக் கொடுக்கப்பட்டிருந்ததாகவும், இவ்விதமாய் அவள் குடும்பத்தாருக்கு இப்படிப்பட்ட தகவல் தனிப்பட தெரிய வந்ததாகவும் சிலர் நம்புகின்றனர். (சூழ்ச்சி பற்றி செய்தியானது சபையாருக்குத் தெரிய வந்து, அவர்கள் பவுலுக்கு வார்த்தை சொல்லச் சிறுபையனை அனுப்பியதாகவும் கூட ஒரு கருத்து உள்ளது. பல்வேறு சாத்தியக் கூறுகளின் அடிப்படையில் பார்க்கையில் இது ஒருவேளை ஏற்புடையதல்லாதிருக்கலாம்.) [15]பழங்கால வசனப் பிரதியொன்றில், வசனம் 24ன் முடிவில் "ஏனென்றால் யூதர்கள் அவரை[பவுலை]ப் பிடித்துக் கொலை செய்து விடுவார்கள், பிறகு தாம் [சேனாதிபதி] பணம் வாங்கினார் (அதாவது இலஞ்சம் வாங்கினார்) என்று குற்றம் சாட்டப்படலாம் என்று பயந்தார்" என்று கூடுதல் விபரம் தரப்பட்டுள்ளது. [16]சேனாதிபதியின் பதவியைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்ட கிரேக்க வார்த்தையானது, அவர் தமக்குக் கீழ் ஆயிரம் போர்வீரர்களைப் பெற்றிருந்தார் என்று சுட்டிக்காட்டுகின்றது. [17]William Barclay, *The Acts of the Apostles*, The Daily Study Bible Series, rev. ed. (Philadelphia: Westminster Press, 1976), 166. இந்தக் கருத்தைப் பற்றிய லூக்காவின் உண்மைத் தன்மையைச் சிலர் சந்தேகிக்கின்றார்கள்; ஒரு கைதியைப் பாதுகாக்க அத்தனை போர் வீரர்கள் போன்றவர்களென்ற கருத்தை அவர்கள் ஏளனம் செய்கின்றார்கள். இருப்பினும், அக்காலத்தில் பலஸ்தீனத்தில் கலவரங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. சேனாதிபதி, நாற்பது வெறியர்களைத் தோல்வியடையச் செய்வதற்கு மட்டும் போதுமான போர் வீரர்களை அனுப்பாமல், யாரும் தாக்குவதற்கே தைரியம் கொள்ளாதபடிக்கு போதுமான அளவுக்குப் போர் வீரர்களை அனுப்பி வைத்தார். [18]"அப்போஸ்தலருடைய நடபடிகள், பாகம் 2" இதழில் செசரியாவைப் பற்றிய குறிப்புகளில் காணவும். நடபடிகளின் பாடத்தில் நாம் அடிக்கடி செசரியாவைப் பற்றி விபரங்களைக் காணுகின்றோம் (8:40; 9:30; 10:1, 24; 11:11; 12:19; 18:22; 21:8, 16). [19]"விபரம்" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையான tupos என்பது ''அமைப்பு'' என்பதற்கான வார்த்தையாகும். அந்த நிருபமானது அக்காலத்தில் வடிவமைப்பு அல்லது மாதிரிக்கான தரத்தை விசேஷமாக அலுவலக

கடித முறைமையை பின்பற்றியதாயிருந்தது. லூக்கா அக்கடிதத்தின் சுருக்க வடிவைக் கொடுத்தாரென்று நாம் அறிவதற்காக இந்த வார்த்தையைப் பயன்படுத்தி யிருக்கலாம். லூக்கா அந்தக் கடிதத்தில் இருந்தவைகளை அறிவதற்கு வழியெதுவும் இல்லையென்று வலியுறுத்தி அவரே அதை ''ஏற்படுத்தி'' இருக்கலாம் என்று விமர்சகர்கள் குற்றம் சாட்டுகின்றார்கள். இருப்பினும் அக்கடிதமானது, பவுல் செசரியாவுக்கு வந்த பிறகு, அவரை விசாரணை செய்த சமயத்தில் வாசிக்கப் பட்டிருக்க வாய்ப்புள்ளது. மிக முக்கியமாக, லூக்கா பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டிருந்தார் - அவர் அதன் விபரங்களை அறிந்தார் என்பதில் நான் உறுதியாயிருக்கின்றேன். [20]சங்கத்தார் பவுலை அவர்களுக்கு முன் கொண்டு வரும்படியான வேண்டுகோளுடன் வரும் வரையில் காத்திருக்கலாம் என்பது அவருடைய திட்டமாயிருந்திருக்கலாம். பிறகு அவர் செசரியாவுக்கு ஏற்கனவே பவுலை அனுப்பி வைத்ததற்காக வருத்தம் தெரிவித்து, அவ்விஷயம் பற்றி அவர்கள் தொடர்ந்து வழக்காட விரும்பினால் செசரியாவுக்குச் செல்லும்படி அவர்களுக்கு ஆலோசனை கூறியிருக்கலாம். இந்த ஆலோசனையே பிரதானஆசாரியர் 24:1ல் செசரியாவுக்குச் சென்ற செயலைத் தூண்டியது உறுதி. மேற்கத்திய வசனத்தின்படி, சேனாதிபதி, பவுலைக் குற்றம் சாட்டியவர்களைச் செசரியாவுக்குச் செல்லும்படி கூறினார் (24:8).

[21]சேனாதிபதியின் வார்த்தைகள் (அடிக்குறிப்பு எண் 6ல் அடையப்பட்ட) முடிவை ஆதரிக்கின்றது, அதாவது பவுல் தேவாலயத்தைத் தீட்டுப் படுத்தினார் என்ற குற்றச்சாட்டானது சங்கத்தாரின் முன்னிலையில் பவுல் "விசாரணை" செய்யப்பட்ட போது கூறப்படவில்லை - ஏனென்றால் தேவாலயத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்குவதென்பது மரண தண்டனைக்குரிய குற்றமாயிருந்தது. [22]இவ்விடத்தில் இயேசுவின் விசாரணையில் நடந்ததற்கு இணைவான இன்னொரு நிகழ்ச்சி உள்ளது (யோவா. 18:38). லூக்கா இதை ஒரு ரோம அதிகாரிக்கு எழுதினார் என்பதை நினைவில் வையுங்கள் ("அப்போஸ்தலருடைய நடபடிகள், பாகம் 1" இதழில் அப். 1:1க்கான குறிப்புகளைக் காணவும்). அநேகமாக அவர், ரோமாபுரியின் எந்தச் சட்டத்தையும் மீறிய குற்றத்தைக் கிறிஸ்தவர்கள் செய்ததில்லை என்ற ரோமர்களின் நிலைத்த கருத்தைத் தெளிவாக்க விரும்பியிருக்கலாம். [23]அந்திப்பத்திரி என்ற இந்த ஊரானது பழைய ஏற்பாட்டில் ஆப்பெக் என்று அழைக்கப்பட்டிருந்தது (1 சாமு. 4:1). இந்த நகரமானது பெரிய ஏரோதினால் மறுபடியும் கட்டப்பட்டு, அவரது தகப்பனாகிய அந்திப்பத்தரின் நினைவாக மறுபெயரிடப்பட்டது. [24]Charles R. Swindoll, *The Strength of an Exacting Passion* (Anaheim, Calif.: Insight for Living, 1992), 103. [25]இது, பவுலைக் குற்றம் சாட்டியவர்கள் அவருக்கெதிரான குற்றச்சாட்டுகளைப் பேலிக்ஸுக்கு முன்பாகக் கொண்டு வர வேண்டுமென்ற அறிவுறுத்தல் சேனாதிபதியின் கடிதத்தில் காணப்பட்டதால், அதற்குப் பதில் கூற்றாக இருந்தது (வ. 30). அடுத்த அதிகாரத்தில் முதலாவதாக இது நடைபெறுகின்றது. [26]"Praetorium" (அரமணை) என்பது பல இடங்களில் இருந்த ''அலுவலக'' இடங்களைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்ட கிரேக்க வார்த்தையின் ஒலி பெயர்ப்பாகும் (மத். 27:27; மாற். 15:16; யோவா. 18:28, 33; 19:9; பிலி. 1:13). [27]Quoted in Wiersbe, 496. [28]Ed Wharton, *The Action of the Book of Acts* (Dallas: Gospel Teachers Publications, 1977), 54.